


admin@dhinakani.com


RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI www.dhinakani.com காலை நாளிதழ்





| Vol: 02 | Issue: 322 | 4 Pages | 17.6.2025 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 322 | 4 பக்கங்கள் | 17.6.2025 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா**
**பிற்பகல் தாமே வரும்**

**விளக்கம்:**
முற்பகலில் மற்றவருக்கு துன்பமானவற்றைச் செய்தால் அவ்வாறு செய்தவர்க்கே பிற்பகலில் துன்பங்கள் தாமாக வந்து சேரும்.

## அந்தமான் கடல் பகுதியில் நிலநடுக்கம்: ரிக்டரில் 4.8 ஆக பதிவு




புதுடெல்லி, ஜூன் 17

அந்தமான் கடல் பகுதியில் இன்று மதியம் திடீர்நிலநடுக்கம்ஏற்பட்டு உள்ளது. மதியம் 2.44 மணியளவில் ஏற்பட்ட நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 4.8 ஆக பதிவாகி உள்ளது என தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

அந்தமான் கடலில் 128 கிலோமீட்டர் ஆழத்தை மையமாக கொண்டு இந்த நிலநடுக்கம் 11.06 டிகிரி வடக்கு அட்சரேகையிலும், 93.49 டிகிரி கிழக்கு தீர்க்கரேகையிலும் இருக்கும் என முதலில் தீர்மானிக்கப்பட்டது. இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட பாதிப்புகள் பற்றிய விவரங்கள் எதுவும் உடனடியாக வெளியிடப்படவில்லை.

## ஏர் இந்தியா விமான விபத்தில் உயிர் பிழைத்த ரமேஷ் விஸ்வாஸ் குமாரின் புதிய வீடியோ வெளியீடு



ஏர் இந்தியா விமான விபத்தில் உயிர் பிழைத்த ரமேஷ் விஸ்வாஸ் குமாரின் புதிய வீடியோ வெளியாகியுள்ளது.

ஆமதாபாத் சர்தார் வல்லபாய் படேல் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து லண்டனுக்கு ஏர் இந்தியாவுக்கு சொந்தமான விமானம் ஒன்று கடந்த 12 ஆம் தேதி மதியம் புறப்பட்டது.அந்த விமானத்தில் இந்தியா, இங்கிலாந்து, கனடா மற்றும் போர்ச்சுக்கல் நாடுகளை சேர்ந்த 230 பயணிகள் மற்றும் 2 விமானிகள், 10 பணியாளர்கள் என 242 பேர் இருந்தனர்.ஓடு பாதையில் இருந்து விமானம் புறப்பட்ட சில நிமிடங்களில் கட்டுப்பாட்டை இழந்தது.

இதையடுத்து அவசர கால அழைப்பை விடுத்த விமானி, அந்த விமானத்தை விமானநிலையத்தின் அருகில் இருந்த மேகனிநகர் பகுதியில் இருந்த குதிரைப்பந்தய மைதானத்தில் இறக்க முயன்றார். அதற்குள் கட்டுப்பாட்டை இழந்த அந்த விமானம், அந்த பகுதியில் இருந்த பி.ஜே. மருத்துவக்கல்லூரி விடுதி கட்டிடத்தில் விழுந்து, வெடித்து சிதறியது.

இந்தகோரவிபத்தில்விமானத்தில்இருந்த241பேரும்,மருத்துவக்கல்லூரி விடுதிக்கட்டிடத்தில் இருந்த 5 மருத்துவ மாணவர்கள் மற்றும் அந்த மருத்துவக்கல்லூரி வளாகத்தில் இருந்த 19 பேர் என 265 பேர் உடல் கருகி உயிரிழந்தனர். அவர்களில் குஜராத் மாநில முன்னாள் முதல்மந்திரி விஜய் ரூபானியும் ஒருவர்.பலியான பலரது உடல் அடையாளம் காணமுடியாத நிலையில் உள்ளதால், உடல்களை அடையாளம் காண்பதற்கு மரபணு பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது. பரிசோதனை முடிந்து 6 பேரின் உடல்கள் அவர்களது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த விபத்தில், லண்டன் குடியுரிமை பெற்ற இந்தியரான விஸ்வாஸ் குமார் ரமேஷ் என்பவர், அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார். காயம் அடைந்த அவர் ஆமதாபாத் சிவில் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். அவர் தற்போது நலமுடன் உள்ளார்.

விமான விபத்தின் போது உயிர் பிழைத்த விஸ்வாஸ் குமார் ரமேஷின் புதிய வீடியோ ஒன்று தற்போது வெளியாகியுள்ளது. மொபைல் போன் ஒன்றை கையில் வைத்துக்கொண்டு வெள்ளைநிற டி ஷார்ட் உடன் ரமேஷ், விபத்து நடைபெற்ற இடத்தில் இருந்து காயங்களுடன் நடந்து வருகிறார். அவரை அங்கிருந்த உள்ளூர் மக்கள் உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்து செல்கிறார்கள். இந்த புதிய வீடியோ சமூக வலைத்தளங்களில் வேகமாக பரவி வருகிறது. விபத்துக்குள்ளான ஏர் இந்தியா விமானத்தில் 11A இருக்கையில் விஷ்வாஸ் குமார் ரமேஷ் பயணம் செய்து இருந்தார் என்பது நினைவுகூரத்தக்கது.

## 'இடுப்பை காட்டுவதற்கு ரூ.5,000...' ஆன்லைன் பாலியல் தொல்லை அனுபவத்தை பகிர்ந்த இளம்பெண்

மும்பை, ஜூன் 17

மராட்டிய மாநிலம் மும்பையை சேர்ந்த சுபாங்கி பிஸ்வாஸ் என்ற இளம்பெண், ஆன்லைன் வாயிலாக தனக்கு பாலியல் தொல்லை கொடுத்த நபர் குறித்து 'லிங்க்ட்இன்' தளத்தில் வெளியிட்ட பதிவு ஒன்று தற்போது வைரலாகி வருகிறது. அந்த பதிவில் அவர் கூறியிருப்பதாவது;

"நான் ரூ.5,000 தருகிறேன்.. உனது இடுப்பை எனக்கு காட்டு. இது சென்னையை சேர்ந்த ஆசிக் நேரு என்ற நபர், வேலைவாய்ப்பு தருவதாக கூறி நள்ளிரவு 2 மணிக்கு எனக்கு அனுப்பிய குறுஞ்செய்தி. அந்த நபரின் முகப்பு பக்கத்தில் அவர் ஒரு தொழில் நிறுவனத்தின் இயக்குநர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இது ஒரு தனிப்பட்ட நிகழ்வு அல்ல. தொழில்துறையை சேர்ந்த பெண்கள் பலர் சந்திக்கும் பிரச்சினை இது. எனது தொழில், எனது உடல் மற்றும் எனது நேரத்தை நான் மதிக்கிறேன். நான் அமைதியாக இருக்கப்போவதில்லை. எனவே, ஆசிக் நேரு என்ற நபரின் விவரங்களை வெளிப்படையாக குறிப்பிடுகிறேன். எனது சுயமரியாதையை ஒருபோதும் இழக்க மாட்டேன்."

இவ்வாறு சுபாங்கி பிஸ்வாஸ் கூறியுள்ளார். மேலும் ஆசிக் நேரு என்ற நபர் தனக்கு அனுப்பிய வாய்ஸ் மெசேஜ்கள் தன்னிடம் இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார். இந்த விவகாரம் குறித்து பொதுவெளியில் வெளிப்படையாக பேசியது துணிச்சலான செயல் என்று கூறி சுபாங்கிக்கு பலர் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். அதே சமயம், பெண்கள் சிலர் இதே போல் தங்களுக்கு நேர்ந்த பாலியல் தொல்லை அனுபவங்களை பகிர்ந்து வருகின்றனர்

# ரூ.80 கோடியில் பிரமாண்டமாக புனரமைப்பு; வள்ளுவர் கோட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார்

சென்னை, ஜூன் 17

உலக பொதுமறையான திருக்குறளை படைத்த வள்ளுவனுக்கு நினைவு சின்னம் இல்லையே என்ற ஏக்கத்தை போக்கும் விதமாக தமிழ்நாட்டில் தலைநகரான சென்னையில் நுங்கம்பாக்கம் – கோடம்பாக்கம் நெடுஞ்சாலை சந்திப்பில், 5 ஏக்கர் பரப்பளவில் 1974ம் ஆண்டு முதல்வராக இருந்த கலைஞரால் அடிக்கல் நாட்டப்பட்டது. உலகமே வியக்கும் திருக்குறளை போன்று நினைவு சின்னமும் எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தும் விதமாக திருவாரூர் ஆழித்தேரை மாதிரி வடிவமாக கொண்டு, பல்லவக்கலை சிற்ப வேலைபாடுகளுடன் 128 அடி உயரம் கொண்ட விண்ணை முட்டுவதை போன்று உணர்வை தரும் வகையிலாக கல்தேர் செதுக்கப்பட்டது.

சிற்ப வேலைபாடுகளுடன், கல்லால் செதுக்கப்பட்ட சிற்பத்தேரில் திருவள்ளுவர் சிலை வைக்கப்பட்டுள்ளது. காந்தார கலை வடிவில் தோரண வாயிலும், திராவிட கட்டிடக் கலை பிரதிபலிக்கும் வகையில் கட்டப்பட்டது. மேலும், இங்கு 3,000 பேர் அமரும் வகையிலான அரங்கமும், இந்த அரங்கத்தின் மேல் பகுதியில் குறள் மணிமாடம் ஒன்றும் உள்ளது. அதில் 1300 குறள்களும் கற்பலகைகளில் செதுக்கிப் பார்வைக்கு வைக்கப்பட்டது. கலைஞரின் நேரடி கண்காணிப்பில் சிற்பி கணபதியை கொண்டு அடிக்கல் நாட்டிய, அடுத்த இரண்டு ஆண்டுகளில் அதாவது 1976ம் ஆண்டு வள்ளுவர் கோட்டம் அமைக்கப்பட்டு, சுற்றுலா தளமாக விளங்கி வந்தததது.



ஆனால் கடந்த ஆட்சியில் உரிய முறையில் பராமரிக்கப்படாததால், சிதிலமடைந்துதனதுபொலிவை இழந்து மோசமான நிலையில் இருந்தது. இந்நிலையில், திமுக ஆட்சிக்கு வந்த பிறகு வள்ளுவர் கோட்டத்தின் நிலையை அறிந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் இதை புனரமைக்க முடிவெடுத்து ரூ.80 கோடி ஒதுக்கி உத்தரவிட்டார். இதை தொடர்ந்து கடந்த ஆண்டு ஜனவரி 18ம்தேதி முதல்விறுவிறுப்பாகபுனரமைக்கும் பணிகள் நடைபெற்று வந்தது.

இதற்கான பணியில் 270 தொழிலாளர்கள் ஈடுபட்டு வந்தனர். ஓராண்டுக்கும்மேலாகநடைபெற்று வரும் புனரமைப்பு மேம்பாட்டு பணிகளில் கலையரங்கம், குறள் மணி மாட கூரை புனரமைப்பு, தரைகள் புதுப்பித்தல், குறள் மணிமாட ஓவியம் சீரமைத்தல், வளாக சுற்றுச் சுவர் புதுப்பித்தல், தூண்கள், நுழைவாயில் பகுதிகளில் சிற்ப வேலைபாடுகள், மாற்றுத் திறனாளிகள் நடைபாதை என புதிய வடிவில் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் பிரமாண்டமாக மாற்றியமைக்கப்பட்டு வந்தது.

அதன்படி பார்த்தால், வள்ளுவர் கோட்டத்தின் கலையரங்கின் மேற்கூரையில் வள்ளுவனின் பிரமாண்ட படம் அமைக்கப்பட்டுள்ளது. அதோடு திருவாரூர் ஆழித்தேரை காண்பது இன்னும் வியப்பில் ஆழ்த்த கூடிய வகையில் உள்ளது. இதில் சுற்றுலா பயணிகளின் வசதிக்காக முதியோர், மாற்றுத்திறனாளிகளுக்கு பிரத்தேயக மின் தூக்கி , பலநிலை வாகன நிறுத்துமிடம், உணவுக்கூடம், விற்பனை மையம்உள்ளது.

அதோடு கட்டுமானத்தில் சிறப்பு சேர்க்கும் விதமாக மழைநீர் வடிகால் வசதி, 2 லட்சம் கொள்ளளவு நீர் சேமிப்பு தொட்டி அமைத்தலும், சுற்றுலா பயணிகளை கவரும் விதமாக பேவர் பிளாக் பாதை அமைத்தல், ஆர்ஓ பிளான்ட் அமைத்தல், புல்வெளி அமைத்தல், செயற்கை நீரூற்று அமைத்தல், ஒளி ஒலி காட்சி அமைத்தல், கூட்ட அரங்கம் மற்றும் குறள்மணி மாடம் புதுப்பித்தல் உள்ளிட்ட பணிகள் நடந்து வந்தது.

மேலும், வள்ளுவர் கோட்டம் கம்பீரமாக தோற்றம் அளிக்கும் வகையில் பிரமாண்டமான தோரணவாயில் அமைக்கப்பட்டுள்ளது. வேகமாக நடைபெற்று வந்த இந்த பணிகள் அனைத்தும் தற்போது முடிவடைந்துள்ளது. இதனால் புனரமைக்கப்பட்ட வள்ளுவர் கோட்டம் சென்னையில் நடுவில் கம்பீரமாக காணப்படுகிறது. வர்ணம் பூசுதல் உள்ளிட்ட இறுதி கட்ட பணிகள் தற்போது நடைபெற்று வரும் நிலையில், பொதுமக்கள் அதை கண்டுகளிக்கும் வகையில் புனரமைக்கப்பட்ட வள்ளுவர் கோட்டத்தை திறக்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

அதற்கான தேதியும் இறுதி செய்யப்பட்டுள்ளதாக பொதுப்பணித் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அதன்படி, வரும் 21 அல்லது 27ம் தேதி ஆகிய தேதிகளில் ஏதாவது ஒரு தேதி இறுதி செய்யப்பட்டு அன்றைய தினம் திறக்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அன்றைய தினம் முதல்வர் மு.க.ஸ்டாலின்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வள்ளுவர் கோட்டத்தை திறந்து வைக்க உள்ளதாக பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அன்றைய தினம் பொதுமக்களின் பார்வைக்காக மீண்டும் வள்ளுவர் கோட்டம் திறப்பு விழா காண இருக்கிறது.

## பிரதமர் ஸ்ரீநகரில் 6400 கோடி ரூபாய்க்கான திட்டங்களின் கீழ் எந்த பணியும் சரிவர முடியாமலும், முடிந்தபணிகள் பயன்பெறாமலும் இருப்பதால் பொதுமக்கள் அவதி?

கலைஞர் பிறந்த நாளை முன்னிட்டு அம்மையப்பனில் மாபெரும் இலவச மருத்துவ முகாம் திருவாரூர் அம்மையப்பன் ஜூன் 15. திருவாரூர் மண்ணின் மைந்தன் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் 102வது பிறந்த நாளை முன்னிட்டும்,(லேட்) ஏழுமலை (எ) சுப்ரமணியத்தேவர் மனைவியும், ஏழுமலை ரவி அவர்களின் தாயாருமான நினைவில் வாழும் விஜயா அம்மாள் அவர்களின் படத்திறப்பு நிகழ்ச்சியை முன்னிட்டும், துளிர் மருத்துவமனை திருவாரூர், அகர்வால் கண் மருத்துவமனை தஞ்சாவூர், சிவா கிளினிக்கல் லேப் மெடிக்கல் & ஆப்டிகல்ஸ், அம்மையப்பன் இணைந்து நடத்திய மாபெரும் இலவச மருத்துவ முகாம் இனிதே நடைபெற்றது. அம்மையப்பன் சிவா கிளினிக்கல் லேப் உரிமையாளர் பாலசுந்தரம் அனைவரையும் வரவேற்றார். துளிர் மருத்துவமனையை சேர்ந்த மருத்துவர் செல்வகணபதி M.D முகாமிற்கு தலைமை தாங்கினார். ராய் டிரஸ்ட் இன்டர்நேஷனல் மற்றும் ரிச் பல்கலை கழக நிறுவனத் தலைவர் முனைவர் துரை ராயப்பன் முன்னிலை வகித்து, இரத்த தானம் விழிப்புணர்வு செய்தார். உதவும் கரங்கள் அறக்கட்டளை நிறுவனர் பேராசிரியர் ஏழுமலை முதலுதவி பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தி பேசினார். முகாமில் கீழ்கண்ட பரிசோதனைகள் இலவசமாக பரிசோதனை செய்யப்பட்டது.



இரத்த அழுத்தம்,ஆக்சிஜன் அளவு,உடல் வெப்ப நிலை, இரத்தத்தில் சர்க்கரை அளவு, பிளிருபின். கண்பார்வை பரிசோதனை, காது கேட்கும்திறன்,சிறுநீர் தொற்று பரிசோதனை,உடல் பருமன் பரிசோதனை மற்றும் உடல் கொழுப்பு பரிசோதனை, இலவச மருத்துவ ஆலோசனை, இருதய சுருள் படம் (இ.சி.ஜி) போன்ற இலவச பரிசோதனை செய்யப்பட்டு மருந்து மாத்திரைகள் இலவசமாக வழங்கப்பட்டது நோய் கண்டறியபட்டவர்களுக்கு மேல் கிசிச்சைக்காக இலவசமாக துளிர் மருத்துவமனைக்கு பரிந்துரை செய்யப்பட்டது. சிவா கிளினிக் லேப் மருத்துவர்.பா.அகிலா, துளிர் மருத்துவமனை மருத்துவர் இப்ராஹிம், மருத்துவர் வைஷாலி தர்மலிங்கம் மற்றும் மருத்துவ ஊழியர்கள் பிரபா, ஸ்ருதி, உஷா ஆகியோர் முழு உடல் மருத்துவ பரிசோதனை மேற்க் கொண்டனர். சிவா கிளினிக்கல் லேப் பாலசுந்தரம் தன்னார்வலர்கள் அருண் பிரகாஷ் , பரணி, சத்யஸ்ரீ ஆகியோர் இரத்தப் பரிசோதனை மற்றும் இ.சி.ஜி பரிசோதனை செய்தனர். சிவா ஆப்டிக்கல்ஸ் கண் பரிசோதகர் சிவசங்கர், அகர்வால் கண் மருத்துவமனை செய்தி தொடர்பாளர் மணிகண்டன் அகர்வால் மருத்துவமனை கண் பரிசோதகர்கள் சந்தோஷ், சாலமன் ஆகியோர் கண் குறைபாடு உள்ளவர்களுக்கு கண் முழு பரிசோதனை செய்து கண்ணாடி வழங்கினர்.ஹியர் சாப் நிறுவனத்தின் எம்.ஆர்.எம் ஆடியோலஜி லேப் ஊழியர்கள் டேனிஷ் ரஹ்மான் மற்றும் ஆஷிகா ஆகியோர் செவித்திறன் பரிசோதனை செய்தனர் . சிப்லா நிறுவனத்தின் பரிசோதனையாளர் பிரித்திவி ராஜ் நுரையிரல் செயல்பாடு பரிசோதனை செய்தார். இந்த முகாமில் 200 க்கும் மேற்பட்ட பயனாளிகள் பரிசோதனைகளை முற்றிலும் இலவசமாக .செய்து பயனடைந்தனர்.

இறுதியில் ஏழுமலை ரவி நன்றி கூற முகாம் இனிதே நிறைவு பெற்றது.


## வலுவான நாளைய தலைமுறையை உருவாக்கிடும் பொறுப்பு, அங்கன்வாடி மையங்களுக்கு உள்ளது : துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தல்

தேனி , ஜூன்17

வலுவான நாளைய தலைமுறையை உருவாக்கிடும் பொறுப்பு, அங்கன்வாடி மையங்களுக்கு உள்ளது என துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில், “தேனி மாவட்டம் வீரபாண்டியில் சமூக நலத்துறை மற்றும் மகளிர் உரிமைத் துறையின் கீழ் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் மூலம் செயல்பட்டு வரும் குழந்தைகள் மையத்தை இன்று ஆய்வு செய்தோம்.இந்த மையத்திற்கு வருகிற குழந்தைகளின் எண்ணிக்கை – பணியாளர்கள் – செவிலியர்களின் வருகை – பதிவு செய்யப்பட்டுள்ள கர்ப்பிணிகள் மற்றும் தாய்மார்கள் விவரம் – உணவு உள்ளிட்ட பொருட்களின் இருப்பு போன்றவைகளை ஆய்வு செய்தோம்.



குழந்தைகளுக்கு வழங்கப்படும் உணவு வகைகள் – அவர்களுக்கான ஊட்டச்சத்து மற்றும் மருத்துவத் துறை சார்ந்த சேவைகள் – உடல்நலன் உள்ளிட்டவைகள் குறித்து பணியாளர்களிடம் – தாய்மார்களிடமும் கேட்டறிந்தோம்.உடல் ரீதியாகவும் – மன ரீதியாகவும் வலுவான நாளைய தலைமுறையை உருவாக்கிடும் பொறுப்பு, அங்கன்வாடி மையங்களுக்கு உள்ளது என்பதை உணர்ந்து செயல்பட வேண்டுமென அங்கிருந்த அதிகாரிகள் – பணியாளர்களை அறிவுறுத்தினோம்.”இவ்வாறு தெரிவித்தார்.



# கோவை மாவட்டத்தில் 3 நாட்கள் கஞ்சா வேட்டை; 36 பேர் கைது






கோவை , ஜூன் 17

கோவை மாவட்டத்தில் போதைப் பொருள் பயன்பாட்டை முற்றிலும் ஒழித்து, போதைப்பொருள் இல்லாத சமூகத்தை உருவாக்கும்நோக்கில்மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கார்த்திகேயன், நேரடி மேற்பார்வையில் பல்வேறு அதிரடித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அதில் குறிப்பாக கடந்த சில மாதங்களில் நடைபெற்ற ஸ்டோர்மிங் ஆபரேஷன் (Storming Operation) களில் கல்லூரி மாணவர்கள் இடையே கஞ்சா போன்ற போதைப் பொருட்கள் புழங்குவதை தடுக்கும் வகையில் நடைபெற்ற கஞ்சா வேட்டையும், வெளி மாநிலம் மற்றும் வெளி மாவட்ட குற்றவாளிகளை கண்டறியும் பொருட்டும், சட்டத்திற்கு புறம்பாக நடக்கும் செயல்களை கண்டறியும் பொருட்டும் தாபாக்களில் அதிரடி சோதனைகள் நடைபெற்ற குறிப்பிடத்தக்கது. மேலும் இதுபோன்ற பல ஸ்டோர்மிங் ஆபரேஷன் (Storming Operation) கள் அதிரடியாக நடைபெற்று வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, கடந்த 13 ம் தேதி முதல் 15 ம் தேதி வரை மூன்று நாட்கள் ("Operation Drug Free) கோவை" என்ற பெயரில் மாவட்டம் முழுவதும் ஒரே நேரத்தில், தேடுதல் வேட்டை நடத்தப்பட்டது. முன்னதாக கடந்த நாட்களில் கஞ்சா வழக்குகளில் தொடர்புடைய 927 நபர்கள் மற்றும் தகவல்கள் அடிப்படையில் சேகரிக்கப்பட்ட பட்டியல் ஒன்றும் தயார் செய்யப்பட்டது. இந்த பட்டியலானது தரவுகள் மற்றும் ரகசிய தகவல்களின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்டு, இந்த அதிரடி வேட்டை கோவை மாவட்டத்தில் 89 தனிப்படைகள் உருவாக்கப்பட்டு, மொத்தம் 300 போலீசார் ஈடுபடுத்தப்பட்டனர்.

துணை காவல் கண்காணிப்பாளர்களின்தலைமையில் நிர்வகிக்கப்பட்டு, ஒவ்வொரு குழுவிற்கும் தேவையான வழிமுறைகள் ( SOP ) வழங்கப்பட்டது. முக்கியமாக 761 நபர்கள் தேடுதல் மற்றும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். 461 நபர்கள் நேரடியாக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். 289 நபர்கள் தற்போது மாவட்டத்தில் இல்லாதவர்கள் என உறுதி செய்யப்பட்டது. 11 நபர்கள் இறந்து விட்டதாக உறுதி செய்யப்பட்டது. தொடர்ந்து 461 நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட சோதனை மற்றும் விசாரணையில், 36 நபர்கள்கஞ்சா வைத்து இருந்தது உறுதி செய்யப்பட்டது.

அவர்களிடம் இருந்து மொத்தமாக 10.150 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது. மேலும், இதன் தொடர்ச்சியாக அவர்களின் மீது 33 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 36 நபர்கள் கைது செய்யப்பட்டு உள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் 10 நபர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு உள்ளனர். தொடர்ந்து கைது செய்யப்பட்டவர்களிடம், பறிமுதல் செய்யப்பட்ட கஞ்சாவானது யார் எங்கே இருந்து வந்தது? யார் ? மூலம் விநியோகம் செய்யப்பட்டது ? என்கிற கோணத்தில் விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்த காவல் துறை கண்காணிப்பாளர்.

தேடுதலின் போது பிடிபட்டவர்களிடம் இருந்து கிடைத்த தகவல்களின் அடிப்படையில், மேலும் சில முக்கிய குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டு, அவர்களை கைது செய்யும் பணியும் தீவிரமாக நடைபெற்று வருவதாக கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தெரிவித்து உள்ளார். போதைப் பொருட்கள் போன்ற சமூகத்துக்கு தீங்கு விளைவிக்கும் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் காவல் துறையின் கண்காணிப்பில் இருந்து தப்ப முடியாது என்றும், இவ்வாறான கண்காணிப்பில், சட்ட விரோத செயல்கள் கண்டறியப்பட்டால் உடனடி மற்றும் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என எச்சரித்தார்.

மேலும் பொதுமக்கள் விழிப்புணர்வுடன் இருந்து இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் இத்தகைய தவறுகளில் ஈடுபடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும், அவ்வாறு ஏதேனும் இருப்பின் அவர்களை பாதுகாக்கும் பொருட்டு உடனடியாக காவல் துறைக்கு தகவல்கள் தந்து சமூக பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்றும், அறிவுறுத்தி உள்ளார்.

# அதிமுக ஆட்சியில் துப்பாக்கிகள் மலிவு விலைக்கு விற்கப்பட்டன: அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர்



சென்னை, ஜூன் 17

போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

பாமக இளைஞரணி மாவட்டச் செயலாளர் சக்கரவர்த்தி துப்பாக்கியில் சுட்டுக்கொலை செய்யப்பட்டிருப்பது தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறார் எதிர்க் கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி. தமிழ்நாட்டின் பாதுகாப்பைச் சீர்குலைத்துச்சீரழிவு ஆட்சி நடத்திய பழனிசாமி, திமுக அரசைக் குறை சொல்வதற்கு அருகதை கிடையாது!

சக்கரவர்த்தி வழக்கில் சம்பவம் நடந்த 3ஆவது நாளே முக்கியக் குற்றவாளிகள் இருவரை போலீஸ் கைது செய்துள்ளது. சக்கரவர்த்தி 11.06.2025ம் தேதி இரவு பைக்கில் வீட்டிற்குச் சென்றவர் சாலையில் உயிரிழந்து கிடந்தார். சடலத்தை உடற்கூறு ஆய்வுக்கு அனுப்பிவிட்டு, சந்தேகம் மரணமாக முதலில் வழக்குப்பதிவு செய்து விசாரணையைத் தொடங்கியது போலீஸ். உடற்கூறு ஆய்வில், சக்கரவர்த்தி நாட்டுத் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டது தெரிய வந்ததும், கொலை வழக்காக மாற்றப்பட்டு உடனே இருவரை போலீஸ் கைதும் செய்தது.

ஒருவரின் மரணத்திற்குத் தெளிவான காரணம் தெரியாவிட்டால் இபிகோ சட்டத்தின் (IPC) பிரிவு 174ன் கீழ் முதலில் காவல்துறை வழக்குப் பதிவு செய்யும். பிறகு மரணத்தில் சந்தேகம் எழுந்தால் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் (CrPC) பிரிவு 176ன் கீழ் வழக்கை மாற்றுவார்கள். கொலை என்பது உறுதியானால், கொலை வழக்காக மாற்றலாம். இந்த அடிப்படையில்தான் சக்கரவர்த்தி வழக்கு முதலில் மர்ம மரணம் எனப் பதிவு செய்யப்பட்டது. போலீஸ் ஸ்டேஷன் பக்கம் ஒதுங்காத, செய்தித்தாள் படிக்கிற பாமரனுக்குக்கூட தெரிந்த இந்த உண்மை, உள்துறையை கையில் வைத்திருந்த முன்னாள் முதல்வர் பழனிசாமிக்கு தெரியவில்லை என்றால் அவர் முதலமைச்சர் நாற்காலியில் அமரவே தகுதியில்லாதவர். காவல் துறைக்குப் பொறுப்பு அமைச்சராக 4 ஆண்டுகள் இருந்த பழனிசாமிக்கு இந்த அடிப்படை அறிவு கொஞ்சம்கூட இல்லை.

பாஜகபிரமுகர்சீனிவாசன் கொலை வழக்கில் கைதான நபர்களுக்கு ஆதரவாகச் செயல்பட்ட காரணத்தினாலேயே பாமக பிரமுகர் சக்கரவர்த்தி கொலை நடந்துள்ளது. பாஜகவுடன்கூட்டணி சேர்ந்து, பாமகவைக் கூட்டணியில் சேர்க்கும் முயற்சியில் இறங்கியிருக்கும் பழனிசாமி, பாமகவுக்கு தூது விடுவது போல அறிக்கை விட்டிருக்கிறார். பாமக நிர்வாகியைக் கொலை செய்தவர் பாஜக நிர்வாகியின் மகன் என்று பழனிசாமி ஏன் சொல்லவில்லை?

அரசியல் செய்ய எதுவும் கிடைக்காமல், ஏதேனும் குற்றச் சம்பவங்கள் நடக்காதா? அதை வைத்து ஏதேனும் மலின அரசியல் செய்ய முடியாதா? எனக் குற்றங்களைத் தேடி அலைந்து கொண்டிருக்கிறார் பழனிசாமி.

திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கு சிறப்பாக இருப்பதை ஒன்றிய அரசின்புள்ளி விவரங்களே சொல்லும். தேசியக் குற்ற ஆவணக் காப்பகம் (NCRB) வெளியிட்ட தரவுகளின் படி 2020 ஆண்டு பழனிசாமியின் ஆட்சியில் ஐபிசில் பதியப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை 8,91,700, திமுக அரசின் தீவிரமான நடவடிக்கையால் 2022 ஆண்டு ஐபிசில் பதியப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை1,93,913 குறைந்தது. கடுமையான நடவடிக்கைகளை எடுத்துக் குற்றங்களைக் குறைத்தது திராவிட மாடல் அரசுதான். இந்த இலட்சணத்தில் கேடுகெட்ட ஆட்சி நடத்திய பழனிசாமி அதிமுக ஆட்சியில் அமைதியும் வளமும் வளர்ச்சியும் பெற்றதாகக் கூசாமல் அடித்து விட்டுக் கொண்டிருக்கிறார்.

துப்பாக்கி கலாச்சாரம் பற்றியெல்லாம் பழனிசாமி பேசலாமா? அதிமுக ஆட்சியில் துப்பாக்கி மலிவு விலைக்கு விற்கப்பட்டதும், அதை வாங்கி கொலைச் சம்பவங்களில் ஈடுபட்டதையும் மக்கள் மறக்க மாட்டார்கள். திமுக ஆட்சிக்கு வந்த பிறகுதான் துப்பாக்கி கலாச்சாரம் வந்தது போல பழனிசாமி பேசுவதைப் பார்த்து மக்கள் சிரிப்பார்கள்.

★ 2018ல் கள்ளத் துப்பாக்கி கடத்தல் வழக்கில் சென்னையைச் சேர்ந்த பரமேஸ்வரன் எனும் காவலரே கைதானார்,

★ 2020ல் 8 துப்பாக்கிகள், 60 தோட்டாக்களுடன் கும்பகோணம் அருகே மருத்துவர் ராம்குமார் பிடிபட்டார்.

★ 2018 ஏப்ரலில் அடையாறு இந்திரா நகர் வங்கியில் துப்பாக்கி முனையில் 7 லட்சம் கொள்ளை.

★ 2018ல் கன்னியாகுமரியில் 10 ஆயிரம் ரூபாய்க்கு நாட்டுத் துப்பாக்கி விற்பனை.

★ 2020 மே மாதம் திருப்பூரில் நிலம் தொடர்பான பிரச்சினையில் துப்பாக்கியைக் காட்டி மிரட்டி பணம் கேட்ட நபர்,

★ 2020 ஜூலையில் ஈரோட்டிலிருந்து 9 எம்.எம். ரகக் கள்ளத்துப்பாக்கி, 5 தோட்டாக்களுடன் திருநெல்வேலிக்கு வந்த குமுளி ராஜ்குமார்.

★ 2020 செப்டம்பரில் சென்னை பெரம்பூரில் வீடு புகுந்து துப்பாக்கியைக் காட்டி பெண்ணை மிரட்டிய நபர்,

★ 2020 நவம்பரில் திருக்கோவிலூர் அருகே மளிகை கடைகாரர்நாட்டுத்துப்பாக்கியால் சுட்டுக் கொலை.

இப்படிப் பழனிசாமி ஆட்சியில்நடந்ததுப்பாக்கி சம்பவங்களைப் பட்டியலிட்டுக் கொண்டே போகலாம். "துப்பாக்கி கலாச்சாரத்தை ஒடுக்க இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்தது?" என்று கேள்வி கேட்க எடப்பாடி பழனிசாமிக்கு என்ன யோக்கியதை இருக்கிறது?

2020 ஆகஸ்ட் மாதம் வழக்கு ஒன்றை விசாரித்த சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி கிருபாகரன், "பீகார், ஜார்கண்ட், சத்தீஸ்கரில் இருந்து நாட்டு துப்பாக்கிகள் தமிழகத்தில் ரவுடிகள், குண்டர்கள், அரசியல்வாதிகளுக்கு சப்ளை செய்யப்படுகிறது. அரசு உரிய நடவடிக்கைகள் எடுத்து துப்பாக்கி கலாச்சாரத்தை தடுக்க வேண்டும்" என்று கூறியது பழனிசாமிக்கு தெரியாதா? இதுதான் அவருடை ஆட்சியில் நிலவிய அமைதி, வளம், வளர்ச்சியா?

சக்கரவர்த்தி கொலை வழக்கில், "கள்ளத் துப்பாக்கி எப்படி கிடைத்தது என்பதை விசாரிக்க வேண்டும்" என்று சொல்லும் எடப்பாடி பழனிசாமி, அதிமுக ஐடி விங் பிரமுகர் பிரபாத்துக்கு டபுள் பேரல் துப்பாக்கியை யார் வாங்கி கொடுத்தது? என பழனிசாமி விளக்குவாரா?

திமுக அரசு அமைந்த பிறகுதான் குற்றங்கள் தடுக்கப்பட்டு, குறைந்து கொண்டு வருகின்றன. சட்டம் ஒழுங்கைப் சிறப்பாகப் பாதுகாத்து வருவதால்தான் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி 9.69 விழுக்காடாக உயர்ந்து நாட்டிலேயே முதலிடத்தில் இருக்கிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மாட்டு கொட்டகையில் விளையாடி கொண்டிருந்த குழந்தை குருணை மருந்தை தின்று உயிரிழப்பு



சேலம், ஜூன் 17


சேலம் மாவட்டம் கெங்கவல்லி அருகே புனல்வாசல் ஊராட்சியில் வசிப்பவர் குமரேசன். இவர் காட்டுக் கோட்டையில் லாரி பட்டறையில் வேலை செய்து வருகிறார். இவருடைய மனைவி செல்வமணி. நேற்று வீட்டு வேலை செய்து கொண்டிருந்தார்.

இவர்களது 3 வயது குழந்தை பூவரசன், வீட்டில் விளையாடி கொண்டிருந்த போது மாட்டு கொட்டகைக்கு சென்று விளையாடி உள்ளது. அங்கு இருந்த குருணை மருந்தை எடுத்து தின்றதாக தெரிகிறது. இதைக்கண்ட செல்வமணி அதிர்ச்சி அடைந்து குழந்தையை கையில் தூக்கினார். வாயை கழுவிவிட்டு பின்னர் கணவருக்கு தகவல் கொடுத்து விட்டு அக்கம் பக்கத்தினர் உதவியுடன் ஆத்தூர் அரசு ஆஸ்பத்திரியில் சேர்த்தனர்.

அங்கு குழந்தை சிகிச்சை பலன் அளிக்காமல் பரிதாபமாக இறந்தது.

குழந்தையின் உடலை பார்த்து பெற்றோர் மற்றும் உறவினர்கள் கதறி அழுதது அங்கிருந்தவர்களை கண்கலங்க செய்தது. இந்த சம்பவம் தொடர்பாக கெங்கவல்லி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். இந்த சம்பவம் அந்த பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியது.

# குற்றால அருவிகளில் குளிக்க முடியவில்லையா... பக்கத்தில் இன்னொரு அருவி இருக்கு!



தென்காசி ஜூன் 17

தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் உள்ள அனைத்து அருவிகளிலும் நீர்வரத்து அதிகரித்துள்ளதால் குளிக்க தடைவிதிக்கப்பட்டுள்ளது. இதனால், வெளியூர்களில் இருந்து குற்றாலம் வரும் சுற்றுலா பயணிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

ஆனால், பக்கத்தில் இன்னொரு அருவி இருக்கிறது என்பது பலருக்கு தெரியாது. ஏன், தென்காசி மாவட்டத்தில் இருப்பவர்களுக்கே தெரியாது.

அதாவது, தமிழக, கேரளா எல்லைப் பகுதியான அச்சன்கோவில் செல்லும் சாலையில் மணலாறு அருவி அமைந்துள்ளது. தற்போது, குற்றால அருவிகளில் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், மணலாறு அருவியில் சீராக தண்ணீர் விழுவதால், இங்கே பொதுமக்கள் குளிக்க அனுமதிக்கப்படுகிறார்கள்.

இந்த மணலாறு அருவி கேரள வனத்துறை கட்டுப்பாட்டில் இருக்கிறது. இங்கே பிளாஸ்டிக் பைகள், மது பாட்டில்கள் எடுத்துச் செல்ல அனுமதி கிடையாது.

அதே நேரத்தில், நபர் ஒருவருக்கு ரூ.50 கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

# நீதிமன்றங்களில் தமிழ் வழக்காடு மொழியாக வேண்டும்: முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின்




சென்னை ஜூன் 17

பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக தஞ்சாவூருக்கு வருகை தந்துள்ளமுதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் அங்குள்ள முதல்வர் மருந்தகத்தை திடீரென பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இதையடுத்து தஞ்சையில் தி.மு.க. எம்.எல்.ஏ. துரை. சந்திரசேகரன் இல்ல திருமண விழாவில் பங்கேற்ற முதல்வர் ஸ்டாலின் வீரவிஜயன் – தனுஸ்ரீ இணையர் திருமணத்தை நடத்தி வைத்தார். பின்னர் திருமண விழாவில்பேசியமுதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் கூறியதாவது:

1967க்கு முன் சீர்திருத்த திருமணங்கள் சட்டப்படி செல்லாது. அண்ணா ஆட்சிக்கு வந்தப் பிறகு சீர்திருத்த திருமணங்கள் சட்டப்படி செல்லும் என தீர்மானம் நிறைவேற்றினார்.

சீர்திருத்த திருமணங்களுக்கு சட்டப்பூர்வ அங்கீகாரம் பெற்று தந்தவர் பேரறிஞர் அண்ணா. நாட்டிலேயே முதன்முறையாக சுயமரியாதை திருமணங்களை அங்கீகரித்து சட்டமாக்கியது தமிழ்நாடுதான்.

சுப்ரீம் கோர்ட்டிலும், ஐகோர்ட்டிலும் தமிழ் வழக்காடு மொழியாக வேண்டும். நீதிமன்றங்களில் தமிழ் வழக்காடு மொழியாக வேண்டும் என்பது நமது நீண்டநாள் கோரிக்கை. தமிழுக்கு செம்மொழி என்ற பெருமையை தேடி தந்தவர் கலைஞர். குழந்தைகளுக்கு தமிழில் பெயரை சூட்ட வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# ராமதாஸ்அன்புமணி இருவரும் ஒன்றாக இணைந்து செயல்பட வேண்டும்: ஜி.கே.மணி




விழுப்புரம், ஜூன் 17

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் அடுத்த தைலாபுரத்தில் உள்ள இல்லத்தில், பாமக நிறுவனர் ராமதாஸை சந்திக்க வருகை தந்த பாமக கவுரவத் தலைவர் ஜி.கே.மணி செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

ராமதாஸ் அன்புமணி ராமதாஸ் இருவரும் அரசியல் புரியாதவர்கள் அல்ல; இரு தலைவர்களும் பேச வேண்டும். இருவரும் ஒன்றாக இணைந்து செயல்பட வேண்டும் என்பது தான் எங்கள் அனைவரின் ஆசை. பாமகவில் சுமூக தீர்வு ஏற்படுவது இருவரின் கையில் தான் உள்ளது. இருவரும் சேர்ந்துபேசி முன்னெடுத்து சென்றால் நன்றாக இருக்கும் என்பதை தான் நாங்கள் அனைவரும் எதிர்பார்க்கின்றோம். அதற்கான சூழ்நிலை விரைவில் உருவாகும் என நினைக்கிறோம்.

இருவரும் பேசி தீர்வு கண்டால் கட்சியின் வளர்ச்சிக்கும், தேர்தலை சந்திப்பதற்கும், கட்சியினருக்கு உள்ள மன உளைச்சலுக்கும் நல்ல தீர்வாக இருக்கும். அதைதான்தினந்தோறும் பேசி வலியுறுத்தி கண்ணீர் வடித்து கொண்டிருக்கிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

# காதல் விவகாரத்தில் இளைஞர் கடத்தல்: எம்.எல்.ஏ., கூடுதல் டி.ஜி.பி. நேரில் ஆஜராக ஐகோர்ட்டு உத்தரவு



சென்னை ஜூன் 17

திருவள்ளூர் மாவட்டம், களாம்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த தனுஷ் (23 வயது), தேனி மாவட்டத்தைச் சேர்ந்த விஜயஸ்ரீ (21 வயது) ஆகியோர் சமூக வலைதளங்கள் மூலம் காதலிக்க தொடங்கினர். கடந்த ஏப்ரல் மாதம் அவர்கள் சுயமரியாதை திருமணம் செய்து கொண்டனர். இதற்கு விஜயஸ்ரீ பெற்றோர் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். கடந்த 6ந்தேதி தனுஷ் வீட்டுக்குள் விஜயஸ்ரீயின் தந்தை வனராஜா உள்ளிட்ட 2 கார்களில் வந்த கும்பல் நுழைந்தது. அங்கு காதல் ஜோடி இல்லாததால், தனுஷின் சகோதரர் இந்தரஜித்தை காரில் கடத்திச் சென்றனர். இதுகுறித்து இந்தரஜித் தாயார் லட்சுமி 100க்கு போன் செய்து புகார் தெரிவித்தார். இதையடுத்து, இந்திரஜித்தை அதிகாலை 3 மணியளவில் அந்த கும்பல் விட்டுச் சென்றது.

இதுகுறித்து பதிவான வழக்கில் பலர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் கொடுத்த வாக்குமூலத்தில் புரட்சி பாரதம் தலைவரும் எம்.எல்.ஏ.வுமான ஜெகன் மூர்த்திக்கு தொடர்பு இருப்பது தெரியவந்தது. அவரை கைது செய்ய போலீசார் சென்றபோது, பொது மக்கள் தடுத்து நிறுத்தினர். இதையடுத்து முன்ஜாமீன் கேட்டு ஜெகன் மூர்த்தி சென்னை ஐகோர்ட்டில் அவசர மனு தாக்கல் செய்தார். இந்த மனு நீதிபதி பி.வேல்முருகன் முன்பு விசாரணைக்கு வந்தது.

அப்போது மனுதாரர் தரப்பில், "எம்.எல்.ஏ. முறையில் பலர் மனுதாரரை பார்க்க வருவது வழக்கம் தான். அதற்காக இந்த வழக்கில் தொடர்பே இல்லாத மனுதாரரை கைது செய்ய போலீசார் முயற்சிக்கின்றனர்" என்று வாதிடப்பட்டது.

அதற்குநீதிபதி, "தொடர்பு உள்ளதா இல்லையா? என்பது மனுதாரருக்கும், இறைவனுக்கும்தான் தெரியும். 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.எல்.ஏ.வான மனுதாரர் பிறருக்கு முன் உதாரணமாக திகழவேண்டும். போலீஸ் வந்தாலே அவரை கைது செய்யத்தான் வந்துள்ளனர் என்று ஏன் பயப்படவேண்டும்?" என்றார்.

போலீஸ் தரப்பில், "கடந்த 7ந்தேதி இந்த வழக்கில் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த கடத்தல் சம்பவம் நடக்கும்போது, இரவு 11 மணி முதல் அதிகாலை வரை பூந்தமல்லியில் உள்ள ஒரு ஓட்டலில் மனுதாரர் ஜெகன், பணியில் இருந்து நீக்கப்பட்ட முன்னாள் போலீஸ்காரர் மகேஸ்வரி ஆகியோர் இருந்துள்ளனர். இந்த கடத்தல் வழக்கில் பணியில் உள்ள கூடுதல் டி.ஜி.பி.க்கு தொடர்புள்ளது. கடத்தப்பட்ட வாலிபரை போலீஸ் வாகனத்தில் தான்விட்டு சென்றுள்ளனர். அந்த போலீஸ் வாகனத்தை போலீஸ்காரர் ஓட்டியுள்ளார். கைதானவர்களின் வாக்குமூலத்தின் அடிப்படையில் ஜெகன் மூர்த்தியை கஸ்டடியில் வைத்து விசாரித்தால்தான், கூடுதல் டி.ஜி.பி.யின் பங்கு என்னவென்று தெரிய வரும்" எனறு விளக்கம் அளிக்கப்பட்டது.

அதற்கு நீதிபதி, யார் அந்த கூடுதல் டி.ஜி.பி.,? அவர் பெயர் என்ன? என்று கேள்வி கேட்டார். அதற்கு போலீஸ் தரப்பில் கூடுதல் டி.ஜி.பி.யின் பெயர் ஜெயராமன் என்று பதில் அளிக்கப்பட்டது.

இதையடுத்து நீதிபதி "முன்ஜாமீன் மனு தள்ளுபடி, ஏற்பு என்றெல்லாம் உத்தரவிட விரும்பவில்லை. எம்.எல்.ஏ. ஜெகன் மூர்த்தியும், கூடுதல் டி.ஜி.பி.யும் சாதாரண ஆள் இல்லை. அதனால் அவர்கள் இருவரும் பிற்பகல் 2.35 மணிக்கு நேரில் ஆஜராக வேண்டும். கூடுதல் டி.ஜி.பி. ஆஜராக மறுத்தால், அவரை கைது செய்து ஆஜர்படுத்த வேண்டும் என்று உத்தரவிட்டு, முன்ஜாமீன் மனு மீதான விசாரணையை பிற்பகலுக்கு தள்ளிவைத்தார்.

# அரசு மருத்துவமனைகளில் தூய்மைப் பணியாளர்கள் மருத்துவம் அளிக்கும் அவலம்: அன்புமணி கண்டனம்



சென்னை ஜூன் 17

பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளம் அரசு மருத்துவமனையில் காலில் அடிபட்டு காயத்துடன் வந்த நோயாளி ஒருவருக்கு அங்கு பணியாற்றும் துப்புரவுப் பணியாளர் ஒருவரே மருத்துவம் அளித்த காட்சி காணொலியாக வலம் வருவது அதிர்ச்சியளிக்கிறது. தமிழ்நாட்டில் அரசு மருத்துவமனைகள் எத்தகைய அவல நிலையில் உள்ளன என்பதற்கு இந்த காணொலிதான் சான்று ஆகும்.

காயமடைந்த நோயாளிக்கு தூய்மைப் பணியாளர் மருத்துவம் அளிக்கவில்லை; ஏற்கனவே போடப்பட்ட கட்டை மட்டும்தான் பிரித்தார் என மருத்துவமனை தரப்பில் அளித்துள்ள விளக்கம் அபத்தமானது. நோயாளிகளுக்கு கட்டை பிரிப்பது தூய்மைப் பணியாளரின் வேலை அல்ல. அந்தப் பணியை பயிற்சி பெற்ற மருத்துவப் பணியாளர்தான் மேற்கொள்ள வேண்டும். தூய்மைப் பணிகளை மேற்கொண்ட பணியாளர் ஒருவர், அப்படியே நோயாளிக்கு மருத்துவம் அளித்தால் சம்பந்தப்பட்ட நோயாளிக்கு நோய்த் தொற்று ஏற்படும் ஆபத்துகள் உள்ளன. இவற்றை அறிந்திருந்தும் ஒரு நோயாளிக்கு தூய்மைப் பணியாளர் மூலம் சிகிச்சையளிக்கச் செய்திருப்பது கண்டிக்கத்தக்கது.

தமிழ்நாடு முழுவதும் அரசு மருத்துவமனைகளில் மருத்துவர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்களுக்கு கடும் பற்றாக்குறை நிலவுவதுதான் சிக்கலுக்குக் காரணம் ஆகும். மருத்துவப் பணியாளர்களை போதிய அளவில் நியமிக்க வேண்டிய தமிழக அரசு, அதைச் செய்யாமல் வீண் விளம்பரங்களிலும், பொய்ப்பரப்புரைகளிலும் மட்டும்தான் ஈடுபட்டு வருகிறது.

ஒரு காலத்தில் ஒட்டு மொத்த இந்தியாவுக்கும் முன்னுதாரணமாக இருந்த தமிழக மருத்துவத்துறை இப்போது சீரழிவுப் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கிறது. இதற்கு தி.மு.க. அரசுதான் பொறுப்பேற்க வேண்டும். உயிர் காக்கும் துறையில் அலட்சியமாக செயல்படுவதை விடுத்து மருத்துவத் துறையில் காலியாக உள்ள அனைத்துப் பணியிடங்களையும் நிரப்ப தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# பதவி உயர்வில் சமூகநீதி: ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் குழு அமைப்பு



சென்னை, ஜூன் 17

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு முறையில் தரவரிசை பட்டியல் சமூகநீதி அடிப்படையில் இருந்து வந்த நிலையில், சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பின் காரணமாக ஏற்பட்டுள்ள மாற்றம்,

வருங்காலத்தில் ஏற்படக் கூடிய பாதிப்புகள் குறித்து ஆய்வு செய்வதற்கும், சட்ட ரீதியான தீர்வுகள் அளித்திடவும் ஓய்வுபெற்ற ஐகோர்ட்டு நீதிபதி ஜி.எம்.அக்பர் தலைமையில் குழு அமைக்கப்படும் என சட்டசபையில் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு வெளியிட்டிருந்தார்.

அதனை செயல்படுத்தும் வகையில் ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் குழு ஒன்றை அமைத்து தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. சென்னையை தலைமை இடமாகக் கொண்டு இந்த குழு செயல்படும் என அரசாணையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

குழுவிற்கு உதவி செய்ய அலுவலர்கள் மற்றும் பணியாளர்களைநியமித்துதமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.

இந்தக் குழு சட்ட ரீதியிலான தீர்வுகள் மற்றும் பரிந்துரைகளை ஆராய்ந்து மூன்று மாதத்திற்குள் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கல்லிடைக்குறிச்சி அருகே திருமணமான 10 மாதங்களில் இளம்பெண் தற்கொலை : உதவி கலெக்டர் விசாரணை



திருநெல்வேலி ஜூன் 17

திருநெல்வேலி மாவட்டம் கல்லிடைக்குறிச்சி அருகே உள்ள வைராவிகுளம் ராமசாமி கோவில் தெருவைச் சேர்ந்தவர் சேகர். இவருக்கும், கோவை மாவட்டம் சூலூர் பகுதியைச் சேர்ந்த கிருத்திகா (21 வயது) என்பவருக்கும் கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் திருமணம் நடந்தது. பின்னர் கிருத்திகா வைராவிகுளத்தில் கணவர் சேகர் வீட்டில் வசித்து வந்தார்.

இந்த நிலையில் கணவன் மனைவி இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு கடந்த 4 மாதங்களாக பேசாமல் இருந்து வந்ததாக கூறப்படுகிறது. சம்பவத்தன்று கிருத்திகா வீட்டில் இருந்த பூச்சிக்கொல்லி மருந்தை (விஷம்) குடித்து மயங்கி விழுந்து உயிருக்கு போராடினார்.

உடனே அவரை கல்லிடைக்குறிச்சி தனியார் மருத்துவமனையில் சேர்த்து முதலுதவி சிகிச்சை அளித்து, மேல் சிகிச்சைக்காக நெல்லை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு தீவிரசிகிச்சை அளிக்கப்பட்டது. ஆனாலும் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் இரவு கிருத்திகா பரிதாபமாக இறந்தார்.

இது குறித்து கல்லிடைக்குறிச்சி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். திருமணமான 10 மாதங்களில் கிருத்திகா தற்கொலை செய்ததால் உதவி கலெக்டர் மேல் விசாரணை நடத்தி வருகிறார்.

# சிவகங்கை மஞ்சுவிரட்டு: காளையர்களை பந்தாடிய காளைகள்



சிவகங்கை, ஜூன் 17

சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி அருகே எஸ்.எஸ்.கோட்டையில் உள்ள படைத்தலைவி அம்மன், கருக்குமடை அய்யனார் கோவில் திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை காப்பு கட்டுதலுடன் தொடங்கியது. விழாவின் 8ம் நாள் நிகழ்ச்சியாக அம்மன்சிலை எடுப்பு விழா மற்றும் கருக்குமடை அய்யனார் கோவிலுக்கு புரவி எடுப்பு விழா நடைபெற்றது. இக்கோவில் திருவிழாவையொட்டி எஸ்.எஸ்.கோட்டையில் மஞ்சுவிரட்டு நடைபெற்றது. இதற்காக சியாமுத்துக்கண்மாயில் வாடிவாசல் அமைக்கப்பட்டு மஞ்சுவிரட்டு ஏற்பாடுகள் நடந்து வந்தன. போட்டியில் கலந்து கொள்ள சிவகங்கை, மதுரை, திண்டுக்கல், காரைக்குடி, புதுக்கோட்டை, அறந்தாங்கி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து சுமார் 500க்கும் மேற்பட்ட காளைகள் கொண்டுவரப்பட்டு வாடிவாசலில் கட்டப்பட்டன. மேலும் சிங்கம்புணரி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து ஏராளமான மாடுபிடி வீரர்களும் பங்கேற்றனர்.

முன்னதாக கிராமத்தினர் சார்பில் வாடிவாசலுக்கு ஜவுளிகள் எடுத்து வரப்பட்டது. தொடர்ந்து கோவில் காளைக்கு முதல் மரியாதை செய்யப்பட்டு அவிழ்த்து விடப்பட்டது. தொடர்ந்து வாடிவாசலில் கட்டியிருந்த காளைகள் ஒன்றின் பின் ஒன்றாக அவிழ்த்து விடப்பட்டன. சீறிப்பாய்ந்த காளைகளை காளையர்கள் போட்டி போட்டு அடக்கினர். அவற்றில் சில காளைகள் வீரர்களிடம் பிடிபட்டன. சில காளைகள் பிடிபடாமல் காளையர்களை பந்தாடியது.

போட்டியில் கலந்து கொண்ட அனைத்து காளைகளுக்கும் கிராமத்தினர் சார்பில் அண்டா, வேட்டி துண்டுகள் உள்ளிட்ட பல்வேறு பரிசு பொருட்கள் வழங்கப்பட்டன. மேலும் வெற்றி பெற்ற மாடுபிடி வீரர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. போட்டியில் மாடுகள் முட்டியதில் 10க்கும் மேற்பட்டோர் சிறு, சிறு காயம் அடைந்தனர். அவர்களுக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது.

# சென்னையில் மூதாட்டியை தாக்கி 2 பவுன் நகை பறிப்பு




சென்னை, ஜூன் 17

சென்னை அண்ணா நகர், 'ஒய்' பிளாக் 5வது குறுக்குத் தெருவை சேர்ந்தவர் ஜெயலட்சுமி (வயது 73). நேற்று முன்தினம் இரவு கடைக்கு சென்றுவிட்டு வீட்டுக்கு நடந்து வந்து கொண்டிருந்தார். அப்போது மோட்டார் சைக்கிளில் வந்த மர்ம நபர்கள் 2 பேர், ஜெயலட்சுமி கழுத்தில் கிடந்த தங்கச் சங்கிலியை பறிக்க முயன்றனர். அதிர்ச்சி அடைந்த மூதாட்டி கூச்சலிட்டதால் அவரை தாக்கி, கீழே தள்ளிவிட்டு 2 பவுன் சங்கிலியை பறித்து சென்றுவிட்டனர்.

இதில்காயம்அடைந்த மூதாட்டியை சிகிச்சைக்காக ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்த அண்ணா நகர் போலீசார்,

அந்த பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமராவில் பதிவான காட்சிகளை வைத்து நகை பறிப்பில் ஈடுபட்ட மர்ம நபர்களை தேடி வருகின்றனர்.

# நீலகிரியில் பயிர்களை சேதப்படுத்திய காட்டு யானை



நீலகிரி, ஜூன் 17

நீலகிரி மாவட்டம் பந்தலூர் அருகே பிதிர்காடு, சந்தகுன்னு, முக்கட்டி உள்ளிட்ட பகுதிகளில் காட்டு யானைகள் ஊருக்குள் புகுந்து வீடுகளை முற்றுகையிட்டுவருகிறது. பொதுமக்கள், வாகனங்களை தாக்கி வருகிறது. கூடலூர், பந்தலூர் வழியாக சுல்தான் பத்தேரி செல்லும் சாலையை வழிமறித்து வருகிறது. இதனால் பொதுமக்கள் பீதி அடைந்து உள்ளனர்.

சமீபத்தில் சந்தகுன்னு பகுதியை சேர்ந்தஜோய் (வயது 60) என்பவரை காட்டு யானை தாக்கி கொன்றது.

இந்தநிலையில் பிதிர்காடு அரசு தொடக்க பள்ளி அருகே ஒற்றை யானை பொதுமக்கள் குடியிருப்புகளை முற்றுகையிட்டது. விவசாய பயிர்களை சேதப்படுத்தியது. இதனால் பொதுமக்கள் பீதி அடைந்து உள்ளனர். எனவே, காட்டு யானையை விரட்ட வனத்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்து உள்ளனர்.

# திருமலைராஜன் ஆற்றில் தூர்வாரும் பணிகள்: விவசாயிகள் மகிழ்ச்சி



திருவாரூர், ஜூன் 17

குடவாசல் பகுதியில் பெரும்பான்மையான மக்கள் விவசாயத்தையே பிரதான தொழிலாக செய்து வருகின்றனர். இந்தப் பகுதியில் விளை நிலங்களுக்கு ஆதாரமாக விளங்குவது திருமலைராஜன் ஆறு ஆகும். இந்த ஆற்றின் மூலம் கும்பகோணம், திருவிடைமருதூர், குடவாசல், நன்னிலம் மற்றும் காரைக்கால் பகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கர் விளைநிலங்கள் பாசன வசதி பெறுகிறது.

இதில் கண்டரமாணிக்கம், சீதக்கமங்கலம், அதம்பார், நெம்மேலி பகுதியில் இந்த ஆற்றில் புதர்கள் மண்டி, ஆற்றில் தண்ணீர் செல்ல முடியாத நிலையில் இருந்தது. இது தொடர்பான செய்தி கடந்த சில நாட்களுக்கு முன்பு 'தினத்தந்தி' நாளிதழில் புகைப்படத்துடன் வெளியானது.

இந்த செய்தியின் எதிரொலியாக மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தலின் பேரில் பொதுப்பணித்துறை சார்பில் நேற்று திருமலைராஜன் ஆற்றில் செம்பியன் கூந்தலூர், சீதக்கமங்கலம், பம்மல் ஆகிய இடங்களில் போர்க்கால அடிப்படையில் எந்திரங்கள் மூலம் தூர்வாரும் பணியை தொடங்கி உள்ளனர்.

இதனால் மகிழ்ச்சி அடைந்துள்ள அப்பகுதி விவசாயிகள் உடன் நடவடிக்கை எடுத்த அதிகாரிகளுக்கும், செய்தி வெளியிட்ட 'தினத்தந்தி' நாளிதழுக்கும் நன்றி தெரிவித்துள்ளனர்.

# ஆவடி அருகே ரெயில் மோதி இருவர் பலி

சென்னை, ஜூன் 17

ஆவடி அருகே ரெயில் நிலையத்தில் தண்டவாளத்தை கடக்க இருவர் முயற்சி செய்தனர். அப்போது எதிர்பாராதவிதமாக அந்த தண்டவாளத்தில் வந்த ரெயில் மோதி இருவர் பரிதாபமாக உயிரிழந்தனர். இது குறித்து தகவலறிந்த போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்தனர்.

இறந்தவர்களின் உடலை மீட்ட போலீசார் கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். இந்த நிலையில் இறந்தவர்கள் செங்கல் சூளையில் பணிபுரிந்த அன்பு (வயது 60), வேல்முருகன் (42) என அடையாளம் காணப்பட்டனர்.

இது குறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# தனியார் தங்கும் விடுதியில் பணம் வைத்து சூதாடிய 9 பேர் கைது: ரூ.56 ஆயிரம் பறிமுதல்




சென்னை ஜூன் 17

சென்னை பெருநகரில் தடை செய்யப்பட்ட லாட்டரிசீட்டுகளைவாங்குபவர்கள், விற்பவர்கள் மற்றும் சட்ட விரோதமாக பணம் வைத்து சூதாட்டத்தில் ஈடுபடுபவர்களை கண்காணித்து கைது செய்ய சென்னை பெருநகர காவல் ஆணையாளர் அருண் உத்தரவிட்டதன்பேரில், காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தங்களது காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் தீவிரமாக கண்காணித்து இது போன்று சட்டவிரோத செயல்களில் ஈடுபடுவோர் மீது சட்ட நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றனர்.

இதன்தொடர்ச்சியாக, R4 சௌந்திரபாண்டியனார் அங்காடி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலானதனிப்படையினருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில், தனிப்படை போலீசார் நேற்று இரவு, தி.நகர், வடக்கு உஸ்மான் ரோட்டிலுள்ள தனியார் தங்கும் விடுதியை கண்காணித்த போது, அங்கு சிலர் பணம் வைத்து சீட்டுக்கட்டுகளுடன் சூதாட்டத்தில் ஈடுபட்டது உறுதி செய்யப்பட்டது.

அதன்பேரில் மேற்படி இடத்தில் பணம் வைத்து சூதாட்டத்தில் ஈடுபட்ட தனியார் விடுதி மேலாளர் உட்பட 9 நபர்களை போலீசார் கைது செய்தனர். அவர்களிடமிருந்து சூதாட்டத்திற்கு பயன்படுத்திய 8 சீட்டுக்கட்டுகள் மற்றும் ரூ.56,400 பணத்தை பறிமுதல் செய்தனர். இது தொடர்பாக, R4 சௌந்திர பாண்டியனார் அங்காடி காவல் நிலைய போலீசார் வழக்குப்பதிவு செய்து, கைது செய்யப்பட்ட 9 நபர்கள் மீதும் உரிய சட்ட நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# கன்னியாகுமரி: பெண்கள், வயதானவர்களை குறிவைத்து திருடி வந்த கும்பல் கைது; 27 சவரன் நகைகள் மீட்பு



கன்னியாகுமரி ஜூன் 17

கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் பல வருடங்களாக பெண்கள் மற்றும் வயதானவர்களை குறிவைத்து திருடி வந்த கும்பலை போலீசார் கைது செய்தனர்.

கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலினின் உத்தரவின் பேரில் உதவி காவல் கண்காணிப்பாளர் லலித் குமார் தலைமையிலான போலீசார் கன்னியாகுமரி மாவட்டம் உட்பட பல்வேறு இடங்களில் தொடர்ந்து பல வருடமாக திருட்டுத் தொழிலில் ஈடுபட்டிருந்த விருதுநகர் மாவட்டம் சாத்தூர் மேலகாந்தி நகர் பகுதியைச் சேர்ந்த விஜயா, மஞ்சு, அரவிந்த் ஆகிய 3 பேரை கைது செய்தனர்.

இவர்கள் பேருந்தில் பயணம் செய்யும் பெண்கள் மற்றும் வயதான பெண்களை குறி வைத்து பர்ஸ், செயின் ஆகியவைகளை திருடி வந்தது தெரிய வந்துள்ளது. அவர்களிடமிருந்து 27 சவரன் நகைகள் மற்றும் ரூ.2 லட்சத்து 40 ஆயிரத்தை பறிமுதல் செய்த போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர். கன்னியாகுமரி மாவட்டத்தில் பெண்களின் பாதுகாப்பு மற்றும் போக்சோ குறித்து விழிப்புணர்வு செய்ய தனி காவலர்களை நியமித்தது உள்ளிட்ட பல்வேறு முயற்சிகள் எடுத்து வரும் காவல் கண்காணிப்பாளர்ஸ்டாலினுக்கு பொதுமக்கள் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்து வருகின்றனர்.

# ஆசிரியர் நியமனங்களில் தி.மு.க. அரசு காட்டும் அலட்சியப் போக்கு கண்டனத்திற்குரியது டி.டி.வி. தினகரன்



சென்னை ஜூன் 17

அரசுப் பள்ளிகளில் பயிலும் ஏழை, எளிய மாணவர்களுக்கு தரமான கல்வி கிடைப்பதை தமிழக அரசு உறுதி செய்திட வேண்டும் என்று அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

தமிழகத்தில் உள்ள அரசுப் பள்ளிகளில் காலியாக உள்ள 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இடைநிலை ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என இடைநிலை ஆசிரியர்கள்கூட்டமைப்பினர்கோரிக்கைவிடுத்துள்ளதாக நாளிதழ்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியம் கடந்த ஆண்டு ஜூலை மாதம் நடத்திய பணி நியமன போட்டித் தேர்வை எதிர்கொண்டவர்களில் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் தேர்ச்சி பெற்ற நிலையில், காலிப்பணியிட அறிவிப்புக்கு ஏற்ப 2,563 பேருக்கு மட்டுமே பணி நியமன ஆணை வழங்கப்பட்டிருப்பது இடைநிலை ஆசிரியர்களுக்கு இழைக்கும் துரோகம் ஆகும்.

சம வேலைக்கு சம ஊதியம், பணி நிரந்தரம் என ஆட்சிக்கு வருவதற்கு முன்பு ஏராளமான வாக்குறுதிகளை அள்ளி வீசிய தி.மு.க., ஆட்சிக்கு வந்த பின்பு போராடும் ஆசிரியர்கள் மீது அடக்குமுறையை ஏவுவதையே கொள்கையாக வைத்திருப்பதோடு, அரசு பள்ளிகளில் நிலவும் ஆசிரியர் காலிப்பணியிடங்களை கூட நிரப்ப மறுப்பது கடும் கண்டனத்திற்குரியது. எனவே, ஆசிரியர் தேர்வு வாரியத்தின் நியமன போட்டித் தேர்வில் வெற்றி பெற்றவர்களை கொண்டு அரசு பள்ளிகளில் நிலவும் பல்லாயிரக்கணக்கான காலிப்பணியிடங்களை உடனடியாக நிரப்பிடுவதோடு, அரசுப் பள்ளிகளில் பயிலும் ஏழை, எளிய மாணவர்களுக்கும் தரமான கல்வி கிடைப்பதை உறுதி செய்திட வேண்டும் என பள்ளிக்கல்வித்துறையையும், தமிழக அரசையும் வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# தாமரைப்பாக்கம் கங்கையம்மன் கோவிலில் தீமிதி திருவிழா



திருவள்ளூர் ஜூன் 17

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், தாமரைப்பாக்கம் ஊராட்சியில் கங்கையம்மன் திருக்கோவில் உள்ளது. இத்திருகோவிலை இக்கிராம மக்கள் ஏழு தலைமுறையாக வழிபட்டு வருகின்றனர். இக்கோவிலில் இரண்டாம் ஆண்டு தீமிதி திருவிழா கடந்த 3ம் தேதி செவ்வாய்க்கிழமை துவங்கி தினமும் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன.


கங்கை அம்மனுக்கு கூழ் வார்க்கும் நிகழ்ச்சி, கரகம் உடைகளைந்து வேப்பிலை சாத்துதல், கரகம் ஊர்வலம், கங்கை நீராடுதல், புதிய ஆலயத்தில் கணபதி ஹோமம், சிறப்பு பூஜை போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றன. கிராம தேவதை பொன்னியம்மனுக்கு ஊர் கூடி பொங்கல் வைத்தனர். கங்கையம்மனுக்கு பாலாபிஷேகம், மாங்கல்யபூஜை, கரக ஊர்வலம், வெங்கடேச பெருமாள் சுவாமிக்கு சிறப்பு அபிஷேகம் என பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

அம்மனுக்கு பால் அபிஷேகம் நடைபெற்றது. கங்கை அம்மனுக்கு பொங்கல் வைத்து வழிபட்டனர். பின்னர், சிலை கரகம் எடுத்து வந்தனர். மாலையில் கங்கையில் பக்தர்களுக்கு பூச்சூட்டுதல், பழம் போடுதல் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றன. விழாவின் சிகர நிகழ்வான தீமிதி நிகழ்ச்சி நேற்று இரவு நடைபெற்றது. புதிய ஆலயத்தின் எதிரே அமைக்கப்பட்டிருந்த அக்னி குண்டத்தில் ஒருவர் பின் ஒருவராக 300க்கும் மேற்பட்ட பக்தர்கள் இறங்கி தீமிதித்து தங்களது நேர்த்திக் கடனை செலுத்தினர்.

விழாவில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. பின்னர், சுவாமிக்கு மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டது.

இரவு தெருக்கூத்து நிகழ்ச்சி நடைபெற்றது. இன்று காலை மஞ்சள் நீராடுதல் நிகழ்ச்சியும், அம்மனுக்கு கும்பம் படைக்கும் நிகழ்ச்சியும், உடை களைதல் நிகழ்ச்சியும் நடைபெற்றது.

# இயந்திரக் கோளாறு: அவசர அவசரமாக தரையிறங்கிய பிரிட்டிஷ் ஏர்வேஸ் விமானம்




சென்னை, ஜூன் 17

லண்டனில் இருந்து சென்னைக்கு 360 பயணிகளுடன் பிரிட்டிஷ் ஏர்வேஸ் நிறுவனத்துக்கு சொந்தமான போயிங் 7878 விமானம் ஒன்று நேற்று புறப்பட்டது. நடுவானில் பறக்கத் தொடங்கிய சிறிது நேரத்தில், விமானத்தில் இயந்திர கோளாறு ஏற்பட்டு, வானில் வட்டமடித்து பறந்து கொண்டு இருந்தது.

உடனே விமானி விமான நிலையத்திற்கு தகவல் தெரிவித்தார். இதனையடுத்து புறப்பட்ட 37 நிமிடத்தில் அந்த விமானம் உடனடியாகதிரும்பிச்சென்று, லண்டன்ஹீத்ரோ விமான நிலையத்தில், அவசர அவசரமாக தரையிறக்கப்பட்டது. விமானத்தில் இருந்து பயணிகள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர். விமானியின் துரித நடவடிக்கையால் பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது.

இதனால் லண்டன் சென்னை, சென்னை லண்டன் செல்ல இருந்த 2 பிரிட்டிஷ் ஏர்வேஸ் விமானங்களும் இன்று ரத்து செய்யப்பட்டுள்ளன. விமான ரத்தால் இரு மார்க்கத்திலும் 700க்கும் மேற்பட்ட பயணிகள் அவதியடைந்துள்ளனர்.

இதுகுறித்து விமான நிலைய அதிகாரிகள் தரப்பில் கூறுகையில், "அகமதாபாத் விமான விபத்துக்குப் பிறகு, உலகம் முழுவதும் உள்ள விமான நிலையங்களில், விமானங்கள் புறப்படுவதற்கு முன்னதாக, விமானங்களின் இயந்திரங்கள் தொடர்ச்சியாக இரண்டு அல்லது மூன்று முறை சரி பார்க்கப்படுகிறது. விமான இயந்திரங்களில் சிறிய அளவில் பாதிப்புகள் இருந்தாலும், அதை முழுமையாக சரி செய்த பின்பே, விமானங்கள் இயக்கப்படுகின்றன. இதனால் தான் விமானங்கள் தாமதமாவது, இல்லையேல் ரத்து செய்யப்படுவது போன்றவைகள் நடக்கின்றன

பயணிகளின் பாதுகாப்பு நலன் கருதி, இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதால், பயணிகள் தங்களுக்கு ஏற்படும், இதைப் போன்ற பிரச்சினைகளை பொறுத்துக் கொள்ள வேண்டும். விமான நிறுவனங்களுக்கு பயணிகளின் உயிர் முக்கியம் என்று கூறினர்.

# பில்லூர் அணை நிரம்பியது; நடப்பாண்டில் 2வது முறையாக தண்ணீர் திறப்பு

கோவை, ஜூன் 17

கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் அருகே, பில்லூர் வனப் பகுதியில் பில்லூர் அணை அமைந்துள்ளது. இந்த அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக, பில்லூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து காணப்படுகிறது.

இதனால் அணையின் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்து வருகிறது.

அதன்படி நேற்று இரவு 10 மணி நிலவரப்படி அணைக்கு வினாடிக்கு 15 ஆயிரம் கன அடி நீர்வரத்து காணப்பட்டது. இதனால் அணையின் நீர்மட்டம் 92.50 அடியை எட்டியது. அணையில் இருந்து வினாடிக்கு 6 ஆயிரம் கனஅடி நீர் வெளியேற்றப்பட்டது.

இந்த நிலையில், நீர் பிடிப்பு பகுதிகளில் பெய்துவரும் மழை காரணமாக பில்லூர் அணை நடப்பாண்டில் 2வது முறை நிரம்பியுள்ளது. அணையின் நீர்மட்டம் அதன் முழு கொள்ளளவான 100 அடியை எட்டிய நிலையில், அணையில் இருந்து 14,000 கன அடி நீர் திறக்கப்பட்டுள்ளது. தற்போதைய நிலவரப்படி பில்லூர் அணைக்கு வரும் நீர்வரத்து 8,438 கன அடியாக உள்ளது.

இதனிடையே பவானி ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓட வாய்ப்புள்ளதால் கரையோர பகுதி மக்கள் மிகவும் கவனமாக இருந்து, பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல வேண்டும் என்று அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர். தொடர்ந்து பில்லூர் அணை செயற்பொறியாளர் மேற்பார்வையில் அதிகாரிகள் அணையின் நீர்வரத்து, நீர்மட்டம் ஆகியவற்றை தீவிரமாக கண்காணிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

17.6.2025

# மங்களூரு அருகே மண்சரிவு: நாகர்கோவிலுக்கு 14 மணி நேரம் தாமதமாக வந்தடைந்த ஜாம்நகர் எக்ஸ்பிரஸ்



நாகர்கோவில், ஜூன் 17

கர்நாடக மாநிலம் மங்களூரு அருகே பெய்து வரும் பலத்த மழையால் தண்டவாளம் அருகில் மண் சரிவு ஏற்பட்டுள்ளது. இதையொட்டி மங்களூர்உடுப்பிஇடையே இந்த ரெயில் நிறுத்தி வைக்கப்பட்டது. நேற்று இரவில் நெல்லைக்கு அந்த ரெயில் வந்து சேர வேண்டிய நிலையில், 5.30 மணி நேரமாக ஒரே இடத்தில் நின்ற ரெயில், நேற்று காலை 8.30 மணி அளவில் உடுப்பி பகுதியில் பின்னோக்கி இழுத்து செல்லப் பட்டது.

இதனால் மாற்று பாதையில் இயக்கப்படுமா? அல்லது இதே பாதையில் மண் முழுவதும் அகற்றிய பிறகு இயக்கப்படுமா? என்பது குறித்த எந்த ஒரு தகவலும் ரெயில்வே நிறுவனம் தரப்பில் இருந்து அதிகாரப்பூர்வமாக கூறப்படவில்லை. இதனால் பயணிகள், முதியோர், நோயாளிகள் அவதிப்பட்டனர். பின்னர் 7½ மணி நேரம் தாமதத்துக்கு பின்னர் அதே வழித்தடத்தில் மீண்டும் ரெயில் புறப்பட்டு இயக்கப்பட்டது. நாகர்கோவில் டவுண் ரெயில் நிலையத்திற்கு நேற்று மாலை 3.50 மணிக்கு வர வேண்டிய ஜாம்நகர் எக்ஸ்பிரஸ் இன்று அதிகாலை 5.30 மணிக்கு வந்தடைந்தது. அந்த ரெயில் 14 மணி நேரம் தாமதமாக வந்ததால் தென்மாவட்ட பயணிகள் கடும் அவதி அடைந்தனர்.

# பட்ட பகலில் நடுரோட்டில் தெருகூத்து கலைஞர் வெட்டிக்கொலை போலீசார் விசாரணை




கிருஷ்ணகிரி, ஜூன் 17

கிருஷ்ணகிரி மாவட்டம் வரட்டனப்பள்ளி அடுத்த அருகே உள்ள தேசுப்பள்ளி கிராமத்தைச் சேர்ந்தவர் வெங்கடேசன் (வயது 45). கிருஷ்ணகிரியில் தெருகூத்து கலைஞராக உள்ளார். இன்று மதியம் கிருஷ்ணகிரி நகரில் உள்ள ரவுண்டானா பகுதியில் இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்த போது திடீரென பின்னே வந்த வேப்பனப்பள்ளியை அடுத்த குருவரெட்டிபோடூர் கிராமத்தைச் சேர்ந்த சின்னநரசிம்மன் என்பவர் அவரது கழுத்து மற்றும் முகத்தில் கத்தியால் பலமாக வெட்டி உள்ளார்.

இதில் வெங்கடேசன் படுகாயம் அடைந்த நிலையில் சாலையில் இருசக்கர வாகனத்தில் கீழே விழுந்து ரத்த வெள்ளத்தில் துடிதுடித்துள்ளார். தகவல்அறிந்துவிரைந்தவந்தபோலீசார் வெங்கடேசனை மீட்டு ஆம்புலன்ஸ் மூலம் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனை மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு அவரை மருத்துவர்கள் பரிசோதித்து பார்த்த போது அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக மருத்துவர் தெரிவித்தனர்.

இதையடுத்து வெங்கடேசனை கொலை செய்து தப்பி ஓடிச் சென்ற சின்ன நரசிம்மனை போலீசார் கைது செய்தனர். இதையடுத்து கொலைக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர். பட்ட பகலில் நடு ரோட்டில் ஒருவர் வெட்டி கொலை செய்யப்பட்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்படுத்தி உள்ளது.

# நீலகிரி: வாகனம் மீது ராட்சத மரம் முறிந்து விழுந்து விபத்து



நீலகிரி, ஜூன் 17

நீலகிரி மாவட்டத்திற்கு ரெட் அலர்ட் விடுக்கப்பட்டதில் இருந்து தொடர்ந்து பரவலாக மழை பெய்து வருகிறது. இதனால் குன்னூர் சுற்றுவட்டார பகுதிகளில் பலத்த காற்றுடன் சாரல் மழை செய்து வருகிறது.

இந்த நிலையில் குன்னூரில் இருந்து மஞ்சூர் செல்லும் சாலையில் கோடேரி கிராமம் அருகே பிக்கப் வாகனம் ஒன்று சென்றுகொண்டிருந்தது. அப்போது பலத்த காற்றின் காரணமாக சாலை அருகே இருந்த ராட்சத மரம் ஒன்று முறிந்து பிக்கப் வாகத்தின் மீது முறிந்து விழுந்தது.

இந்த வாகத்தை ஓட்டி வந்த விக்னேஷ் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார். இந்த விபத்தில் வாகனத்தின் முன் பகுதி பலத்த சேதமடைந்தது. இது குறித்து தகவலறிந்த தீயணைப்புத்துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். தற்போது மரத்தை அகற்றும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் குன்னூர் மஞ்சூர் சாலையில் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக போக்குவரத்து பாதிப்படைந்தது.

# இஸ்ரோ முன்னாள் விஞ்ஞானி மறைவு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் இரங்கல்

சென்னை, ஜூன் 17

முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் தெரிவித்திருப்பதாவது:

இஸ்ரோ முன்னாள் விஞ்ஞானி மற்றும் எழுத்தாளர் நெல்லை சு.முத்து அவர்கள் மறைந்த செய்தியறிந்து வேதனையுற்றேன்.

ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் பணியாற்றியவர் சு.முத்து. அறிவியல், விண்வெளி ஆராய்ச்சி குறித்து ஏராளமான நூல்களை எளிய தமிழில் எழுதியுள்ளதோடு மொழிபெயர்ப்பாளராகவும் அறிவியல் தமிழுக்குப் பங்காற்றியுள்ளார்.

முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாமுடன் பணியாற்றிய முத்து , அப்துல் கலாம் குறித்தும் பல நூல்களை எழுதியுள்ளார்.

இந்தியாவுக்குப் பெருமை சேர்த்து, தமிழ்மொழிக்கு வளம் சேர்த்து வாழ்ந்து மறைந்துள்ள நெல்லை சு. முத்துவை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் (17.6.2025)

மேஷம்: தற்சமயம் நீங்கள் தாங்கும் இடத்தில் இருந்தால் அதைக் கவனியுங்கள். உங்கள் பலங்களை மேம்படுத்த வாய்ப்பு!

ரிஷபம்: நம்பிக்கை வளர்க்க பல்டிக் எளிய மாற்றங்கள் போதும். வாழ்க்கை மாற்றங்களை அறிவு மிக முக்கியம்.

மிதுனம்: தொழிலிலும், காதலிலும் இணைவாகக்கூட்டணி பெற்றிடும். உங்கள் மனதைப் புரியுங்கள்.

கடகம்: பணிக்கான அல்லது உறவுகளுக்கான அடிப்படைகளில் வாங்கிக் கொள்வது முக்கியம். வெறுமைப்பட்ட வரிசையால் தூரமாக இருக்கவும்.

சிம்மம்: அதிகார சவால்களை முறித்து பொறாமை தவிர்க்கவும்; பெரிய நோக்கத்துக்குப் பயணிக்கவும்.

கன்னி: இன்றையநாள்இரக்கமோமுறையோ இருங்கள்; பொய்ப் பேச்சு நீக்கவும்.

துலாம்: பெரிய முதலீடை ஆராய்ந்து எடுத்துக் கொள்ளவும். பாஸ்வர்ட் செலவினங்களை ஆய்ந்த பிறகு முக்கிய முடிவு எடுக்கவும்.

விருச்சிகம்: எதிர்பாராத வாய்ப்புகள் வரலாம்—ஏற்றுக்கொள்ள தயார்.

தனுசு: நிதி/காதல் கடன்களை சீராக்க கவனம் செலுத்துங்கள். சீரான நிலையில் இறங்கும்.

மகரம்: பெரிய முயற்சியில் துடிப்பாய் இறங்குங்கள்—நீங்கள் நிகழ்த்தும் செயலால் மற்றவர்களும் தூண்டப்படுவர்.

கும்பம்: உணர்வுக்கும் அதிவாசிக்கு இடமளியுங்கள்—வலது அறிவும் உணர்வும் சேர்த்து செயல்பட வேண்டும்.

மீனம்: உள்மன அமைதியோடு சொற்கள் திரும்பிக்கும். உள அழுத்தத்தை தவிர்க்கவும்.

# குரங்கு கையில் 500 ரூபாய் நோட்டுகள் சுற்றுலா பயணியின் பணத்தை தூக்கிச்சென்றதால் பரபரப்பு



கொடைக்கானல், ஜூன் 17

மஞ்சுமெல்பாய்ஸ் படம் வெளியானதை அடுத்து குணா குகைக்கு வரும் சுற்றுலா பயணிகள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. கர்நாடகாவைச் சேர்ந்த சுற்றுலா பயணிகள் சிலர் கொடைக்கானலில் உள்ள குணா குகைக்கு சுற்றுலா வந்தனர். இந்த நிலையில் செலவிற்காக 500 ரூபாய் நோட்டுக் கட்டுகளை வைத்திருந்தனர். அப்போது அங்கு அட்டகாசம் செய்துகொண்டிருந்த குரங்குகளில் ஒன்று சுற்றுலாபயணி வைத்திருந்த பணக்கட்டுகளை தூக்கிச்சென்றது. இதனையடுத்து மரத்திற்கு மேல் இருந்த குரங்கு ஒவ்வொரு நோட்டாக தூக்கி வீசியது. இந்த சம்பவத்தை அங்கிருந்தவர்கள் வீடியோ எடுத்தனர். இந்த வீடியோ காட்சிகள் தற்போது வைரலாகி வருகிறது. இந்த சம்பவத்தால் குரங்கின் அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக சுற்றுலா பயணிகள் குற்றஞ்சாட்டி உள்ளனர்.

# தண்டவாளத்தை கடக்க முயன்றபோது ரெயில் மோதி பெண் பலி

தூத்துக்குடி ஜூன் 17

தூத்துக்குடி மாவட்டம், ஆறுமுகநேரி ரெயில்வே கேட் அருகில் உள்ள பெருமாள் புரத்தைச் சேர்ந்தவர் பாலகிருஷ்ணன் மனைவி ஈஸ்வரி (வயது 68). இவர்களுக்கு ஒரு மகனும், 2 மகள்களும் உள்ளனர். அனைவருக்கும் திருமணமாகிவிட்டது. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு பாலகிருஷ்ணன் இறந்துவிட்டார். ஈஸ்வரி தனது மகனுடன் வசித்து வந்தார். 2 மகள்களும் தண்டவாளத்தின் மறுபுறத்தில் உள்ள வீடுகளில் வசித்து வருகின்றனர். இதனால் ஈஸ்வரி அடிக்கடி மகள்களின் வீடுகளுக்கு சென்று வந்தார்.

இந்த நிலையில் நேற்று மதியம் ஈஸ்வரி பெருமாள்புரத்தில் ரெயில்வே தண்டவாளத்தை கடந்து மகள்களின் வீடுகளுக்கு செல்ல முயன்றார். அப்போது அந்த வழியாக திருச்செந்தூரில் இருந்து பாலக்காடு நோக்கி சென்ற எக்ஸ்பிரஸ் ரெயில் ஈஸ்வரி மீது மோதியது. இதில் அவர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார்.

உடனேரெயிலைடிரைவர்நிறுத்திவிட்டு, ஆறுமுகநேரி ரெயில் நிலைய அதிகாரிக்கு தகவல் தெரிவித்தார். தொடர்ந்து ஆறுமுகநேரி போலீசார் விரைந்து சென்று, இறந்த ஈஸ்வரியின் உடலை மீட்டனர். பின்னர் ரயில் சுமார் 20 நிமிடம் தாமதமாக புறப்பட்டு சென்றது. இறந்த ஈஸ்வரியின் உடலை ரெயில்வே போலீசார் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக திருச்செந்தூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இதுகுறித்து வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# 'படை தலைவன்' படத்தின் வசூல் விவரம்



விஜயகாந்தின் இளைய மகன் சண்முக பாண்டியன் நடிப்பில் கடந்த 13ந் தேதி வெளியான படம் 'படைத்தலைவன்'. இந்த படத்தினை இயக்குனர் அன்பு இயக்கியுள்ளார். டிரைக்டர்ஸ் சினிமாஸ் தயாரித்துள்ள இப்படத்திற்கு இளையராஜா இசையமைத்துள்ளார். இப்படத்தில் கஸ்தூரி ராஜா, எம் எஸ் பாஸ்கர், யாமினி சந்தர் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

புதுமையான திரைக்கதையில் முழுக்க முழுக்க காட்டுக்குள் நடக்கும் கதைக்களத்தில் பரபரப்பான திருப்பங்களுடன் இப்படத்தின் திரைக்கதை உருவாக்கப்பட்டுள்ளது. இந்த படத்தில் ஏஐ தொழில்நுட்பத்தை பயன்படுத்தி கேப்டன் விஜயகாந்த்தை கொண்டுவந்துள்ளனர். விஜயகாந்த் வரும் காட்சிக்கு திரையரங்கில் மாபெரும் வரவேற்பு கிடைத்து வருகிறது.

தமிழகம் எங்கும் உள்ள 500 திரையரங்குகளில் வெளியான படை தலைவன் படம் முதல் நாளில் ரூ. 80 லட்சம் முதல் நாள் வசூல் செய்துள்ளது. அதனை தொடர்ந்து இப்படம் இரண்டு நாள் முடிவில் ரூ.2.50 கோடியை வசூலித்துள்ளதாக தகவல் கிடைத்துள்ளது.

# "தி ராஜாசாப்" டீசர்: எதிர்பார்ப்புகளை அதிகரித்த பிரபாஸின் புதிய போஸ்டர்



நடிகர் பிரபாஸின் திகில் நகைச்சுவை படமான 'தி ராஜா சாப்' படத்தின் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட டீசர் நாளை காலை 10:52 மணிக்கு வெளியாக உள்ளது.

படக்குழு வெளியிட்டிருந்த பிரீடீசர், நாளை வெளியாக உள்ள டீசருக்கான எதிர்பார்ப்புகளை அதிகரித்தது. இந்நிலையில், எதிர்பார்ப்புகளை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லும் வகையில், பிரபாஸின் புதிய போஸ்டர் வெளியாகி இருக்கிறது.

ஸ்டைலான தோற்றத்தில் அதில் பிரபாஸ் உள்ளார். இப்படத்தில் நிதி அகர்வால், மாளவிகா மோகனன் மற்றும் ரித்தி குமார் மற்றும் பாலிவுட் நட்சத்திரம் சஞ்சய் தத்ஆகியோர்முக்கியகதாபாத்திரங்களில்நடித்துள்ளனர். இப்படம் டிசம்பர் 5ம் தேதி திரைக்கு வரவுள்ளது.

# மற்றவரிடத்தில் கருணையோடு இருங்கள் நடிகை ராஷ்மிகா



நடிகர் தனுஷ் மற்றும் நாகர்ஜுனா இணைந்து நடித்துள்ள படம் குபேரா. தெலுங்கு இயக்குநர் சேகர் கம்முலா இயக்கத்தில் உருவாக்கப்பட்டிருக்கும் குபேரா படத்தில் ராஷ்மிகா மந்தனா, ஜிம் சர்ப், தலிப் தஹில் ஆகியோர் பலர் நடித்துள்ளனர். தேவி ஸ்ரீ பிரசாத் இந்தப் படத்திற்கு இசையமைத்துள்ளார். மேலும், ஸ்ரீ வெங்கடேஷ்வரா சினிமாஸ் எல் எல் பி மற்றும் அமிகோஸ் கிரியேஷன்ஸ் நிறுவனங்கள் இணைந்து இந்தப் படத்தை தயாரித்துள்ளன. கிடத்தட்ட ரூ. 120 கோடி பட்ஜெட்டில் எடுக்கப்பட்டுள்ளது. வரும் 20 ஆம் தேதி உலகம் முழுவதும் வெளியாக இருக்கும் இந்தப் படம் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் என்று பேன் இந்தியா படமாக உருவாகி இருக்கிறது.

ஏற்கனவே குபேரா படத்தின் டிரைலர் நேற்று வெளியாக இருந்தது. ஆனால், அகமதாபாத் விமான விபத்து தொடர்பாக படத்தின் டிரைலர் ரிலீஸ் தேதி தள்ளி வைக்கப்பட்டது. அதன்படி இன்று ஐதராபாத்தில் மிக பிரம்மாண்டமாக குபேரா ப்ரீ ரிலீஸ் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில், தனுஷ், நாகர்ஜுனா, ராஷ்மிகா மந்தனா, சேகர் கம்முலா ஆகியோருடன் இயக்குநர் எஸ் எஸ் ராஜமௌலி ஆகியோர் பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் தெலுங்கு டிரைலர் வெளியிடப்பட்டது. இயக்குநர் ராஜமௌலி தெலுங்கு டிரைலரை வெளியிட்டார். இதையடுத்து நீண்ட நேரத்திற்கு பிறகு ஆன்லைனில் அனைத்து மொழிகளிலும் டிரைலர் வெளியானது.

குபேரா ப்ரீ ரிலீஸ் நிகழ்வில் நடிகை ராஷ்மிகா பேசியதாவது:

விமான விபத்துக்கு பிறகு நான் நடுங்கிப் போனேன். எதுவும் உலகில் நிரந்தரம் இல்லை என புரிந்தது. நமக்கு இன்னும் எத்தனை நாட்கள் உள்ளன, எதுவரை வாழ்க்கை செல்லும் என தெரியவில்லை. எனவே கவனமாக இருங்கள், மகிழ்ச்சியாக இருங்கள், மற்றவரிடத்தில் கருணையோடு இருங்கள் என்றார்.

# புரோ ஆக்கி லீக்: ஆஸ்திரேலியாவுக்கு எதிராக இந்திய மகளிர் அணி 2வது தோல்வி



9 அணிகள் பங்கேற்றுள்ள 6வது புரோ ஆக்கி லீக் தொடரில் லண்டனில் இன்று நடைபெற்ற ஒரு ஆட்டத்தில் இந்தியாஆஸ்திரேலியா மகளிர் அணிகள் மோதின. ஏற்கனவே இவ்விரு அணிகளும் மோதிய ஆட்டத்தில் ஆஸ்திரேலியா வெற்றி கண்டிருந்தது.

இந்த தோல்விக்கு பதிலடி கொடுக்கும் முனைப்புடன் களமிறங்கிய இந்திய அணி முதல் பாதியில் 10 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது. இதனையடுத்து நடைபெற்ற 2வது பாதி ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி 2 கோல்கள் போட்டது. இந்திய அணியால் கோல் அடிக்க முடியவில்லை.

முழு நேர ஆட்ட முடிவில் இந்திய அணி 1-2 என்ற கோல் கணக்கில் ஆஸ்திரேலியாவிடம் மீண்டும் தோல்வியை தழுவியது. இந்தியா தரப்பில் வைஷ்னவி பால்கே மட்டுமே ஒரு கோல் அடித்தார். ஆஸ்திரேலியா தரப்பில் எமி லாட்டன் மற்றும் லெக்சி தலா ஒரு கோல் அடித்து அணியின் வெற்றியில் முக்கிய பங்கு வகித்தனர்.

# குயின்ஸ் கிளப் டென்னிஸ்: டாட்ஜானா மரியா சாம்பியன்



பல நட்சத்திர வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள குயின்ஸ் கிளப் டென்னிஸ் தொடர் லண்டனில் நடைபெற்று வருகிறது. இதன் மகளிர் ஒற்றையர் பிரிவின் இறுதிப்போட்டி இன்று நடைபெற்றது. இதில் டாட்ஜானா மரியா (ஜெர்மனி), அமண்டா அனிசிமோவா (அமெரிக்கா) உடன் மோதினார்.

இதில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய மரியா 63 மற்றும் 6-4 என்ற நெர் செட் கணக்கில் எளிதில் வெற்றி பெற்று கோப்பையை கைப்பற்றினார்.

# ஆஸி.முன்னாள் வீரர் தேர்வு செய்த ஆல் டைம் சிறந்த டெஸ்ட் அணி.. 2 இந்திய வீரர்களுக்கு இடம்



நூற்றாண்டை தாண்டி நடைபெற்று வரும் கிரிக்கெட் போட்டியில் சிறந்து விளங்கிய வீரர்களை கொண்டு சிறந்த அணியை முன்னாள் மற்றும் இந்தாள் வீரர்கள் தேர்வுசெய்வதுவழக்கம். அந்தவகையில்ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரான மேத்யூ ஹெய்டன் 21ம் நூற்றாண்டில் டெஸ்ட் கிரிக்கெட்டில் சிறந்து விளங்கிய வீரர்களை கொண்டு ஆல் டைம் சிறந்த பிளெயிங் லெவனை தேர்வு செய்து அறிவித்துள்ளார். அந்த அணியில் அதிகபட்சமாக 5 ஆஸ்திரேலியவீரர்களைதேர்வுசெய்துள்ளார். அத்துடன் 2 இந்திய வீரர்களையும் அணியில் சேர்த்துள்ளார்.

மேத்யூ ஹெய்டன் தேர்வு செய்த 21ம் நூற்றாண்டின் ஆல் டைம் சிறந்த டெஸ்ட் அணி:

அலஸ்டர் குக், டேவிட் வார்னர், ஜாக்ஸ் காலிஸ், பிரையன் லாரா (கேப்டன்), விராட் கோலி, விவிஎஸ் லட்சுமணன், ஆடம் கில்கிறிஸ்ட் (விக்கெட் கீப்பர்), ஷேன் வார்னே, பேட் கம்மின்ஸ், பிரட் லீ, ஜேம்ஸ் ஆண்டர்சன்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.